1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிக்கையிலே குறிப்பிட்டேன். 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5ஆம் நாள் அன்று இந்த புகார் கொடுக்கப்பட்டது. அதன்மீது இ.பி.கோ. 323 பிரிவின்படி போலீசார் வழக்கு பதிவு செய்து வழக்குமன்றத்திலே நீதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள, நீதி மன்றத்திற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளார். ஆகவே சட்டப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. விழுப்புரம் வட்டம் அய்யன் கோவில்பட்டு கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் வட்டம், அய்யன் கோவில்பட்டு கிராமத்தில் மட்பாண்ட தொழிலாளர் இல்லங்கள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் அன்று தீ விபத்துக்கு உள்ளானது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர், அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம் அய்யன்கோவில்பட்டு கிராமத்தில் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் அன்று இரவு சுமார் 8 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. 22 குடியிருப்புகள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டன. தீ விபத்து தற்செயலாய் ஏற்பட்டது. உயிர்ச் சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பு சுமார் ரூ. 42,360 முழுதும் பாதிக்கப்பட்ட 22 குடியிருப்புக்களுக்கும் தலா ரூ. 200 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. வேட்டி, புடவை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தீ விபத்தில் உள்ளான அந்த குடும்பங்கள் அனைத்தும், நிலமற்ற ஏழை மட்பாண்ட தொழிலாளர்கள் என்பதாலே அவர்களுடைய தொழில் கருவிகளான சக்கரம், கல், பலகை எல்லாம் அழிந்திருக்கின்றன. இப்போது சித்திரை திருவிழா நாட்களிலே வியாபாரத்திற்காக வைத்திருந்த மட்பாண்டங்

[திரு. கு. பழனியப்தன்] [1981 ஏப்ரல் 20

களும், பொம்மைகளும் முழுவதும் அழிந்து விட்டன. அவர்கள் தொழில்கள் நசிந்து விடக்கூடாது என்ற காரணத்திற்காக அவர்களுக்கு தொழில் கருவிகளை உடனடியாக மானியமாக வழங்க அரசு முன் வருமா ? அதே நேரத்தில் அந்த தொழில் நடைபெறுவதற்கு சௌகரியமாக தீ பிடிக்காத 'அஸ்பெஸ்டாஸ்' கொட்டகை ஒன்று போட்டு அதன் அடியிலே அவர்கள் தொழிலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா ? என்பதை அறிவிப்பதோடு, அங்கே விழுப்புரத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு உட்பட்ட மெயின் ரோடிலே இருக்கிற அந்த கிராமம் பலமணி நேரம் தீயுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டதின் காரணமே, அங்கு தண்ணீர் இல்லாதது தான். எனவே உடனடியாக ஒரு குடிதண்ணீர் கிணறும், ஒரு குழாய் கிணறும் அமைத்துத் தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தீ விபத்தினால் ஏற்பட்ட சேதம் முழுவதையும் நீக்குகிற அளவுக்கு நிவாரணம் அளிப்பது அல்லது மானியம் அளிப்பது குறித்து அரசாங்க விதிமுறைகளில் அல்லது நடைமுறையில் இல்லை. ஓரளவிற்கு விதிமுறைகளின் அடிப்படையிலே நிவாரணம் அளித்து வருகிறோம். பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வீடுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கும், தொழில்களைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் விரும்புவார்களானால் இரண்டாயிரம் ரூபாய் தக்காவி கடன் வழங்குகிற முறை இருக்கிறது. அவர்கள் முறைப்படி அதைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம். ஆறேகால் வட்டியில் அந்தக் கடன்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிட மக்களாக இருப்பார்களானால் வட்டியில்லாத கடனாக இரண்டாயிரம் தரப்படுகிறது. அந்த முறையிலே கடன்களைப் பெற்று தொழில்களை அவர்கள் புதுப்பித்துக் கொள்ளலாம். வறட்சியின் அடிப்படையிலே எங்கெங்கே குடிநீர் கொடுக்கிற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோமோ, அந்தப் பகுதியிலே என்ன சாத்தியக்கூறு அதற்கு உண்டோ அதைச் செய்ய அரசு ஆவன செய்யும்.

திரு. கு. பா. பழனியப்பன் : அங்கே வேட்டி ,சேலை போன்றவற்றைக் கொடுப்பதற்குகூட அரசு முன்வரவில்லை. இதுவரையிலே வழங்கப்படவில்லை, அரிசியும் வழங்கப்படவில்லை. குடிநீர் தேவை என்று பல மனுக்களைக் கொடுத்தும், கிட்டதட்ட அதற்காக அவர்கள் போராட்டத்தை நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தும்கூடமாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அதற்கான உத்திரவு வரவில்லை என்று பஞ்சாயத்து யூனியன் கமிஷன் தெரிவித்திருக்கிறார். ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுத்து

1981 ஏப்ரல் 20] [திரு. கு. பா. பழனியப்பன்]

பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் — அவர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல — கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேட்டி, புடவை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முயற்சி எடுத்து வருகிறார். வழங்கப்பட்டது என்று சொல்லவில்லை, இதுவரையில் கொடுக்கப்படவில்லை, அதற்கான முயற்சிகளை அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். குடிநீர் பற்றி ஏற்கெனவே நான் சொன்னேன். அந்த முறையிலே அதைத் தனியாகப் பரிசீலிக்கவேண்டும். இரண்டாயிரம் வேண்டுமென்று யார் யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

5. அரசினர் சட்டமுன்வடிவு

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளருர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டமுன் முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. வரவு செலவுத் திட்டம் 1981-82வாக்கெடுப்பு—தொடர்ச்சி
அ. கோரிக்கை எண் 20—வேளாண்மை

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்